[திரு .மு. ஆறுமுகம்] [1978 செப்டம்பர் 8

களின் குடும்பத்திற்கு அளிக்கப்பட்டது போல், இந்த மாணவர் களின் குடும்பங்களுக்கும் 5,000 ரூபாய் உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் அந்த கொட்டகையில் ஆறு வகுப்புகள் நடைபெற்றதாகச் சொன்னார்கள். 6 வகுப்புகள் நடைபெறக்கூடிய கொட்டகை 3,000 ரூபாயில் கட்டுமாறு சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒப்பந்தக்காரர் என்ன செய்திருப்பார் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். யார் வைத்த கொள்ளியோ வீடு எரிந்தது என்று சொல்வது போல், இந்தக் கட்டடம் இடிந்து விழுந்ததின் காரணமாக 3 குழந்தைகள் மாண்டன. பல ஆசிரியர்களும், பல குழந்தைகளும் காயங்களும் அடைந்திருக்கின்றனர். இந்த அவல நிலை இங்கு மட்டுமல்ல, பல்வேறு இடங்களிலும் இருந்து வருகிறது. உதாரணமாக, எங்கள் பூதலூர் ஒன்றியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய பள்ளிக் கட்டடத்தைப் பற்றி பல புகார்கள் வந்திருக்கின்றன. அரசு அதையும் கவனிக்குமா என்று கேட்டுக்கொள்வதோடு, ஈடு செய்ய முடியாத இன்னுயிரை இழந்த இந்தக் குழந்தைகளின் குடும்பத்திற்கு அளிக்கப்பட்ட ஈட்டுத் தொகையை கூட்டித் தருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இடிந்து விழுந்த கட்டடம் தற்காலிகமாக கட்டப்பட்ட கட்டடம். அதனால்தான் தென்னம் ஓலையினால்—3,000 ரூபாய் அளவுக்கு மதிப்பீடு செய்து கட்டப்பட்டிருக்கிறது. இதில் தவறு நடந்திருக்கிறதா என்பதை கண்டறிய முயற்சிகள் அரசினால் எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு இளங்கோவன் அவர்கள் சொன்ன ஒன்றியத்தில் என்ன தவறுகள் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்வார்களேயானால் அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

[முற்பகல் 11-10]

(4) ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி).

(ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து—

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். காலரியிலிருந்து, மதுரைப் பல்கலைக்கழகத்தின் பெயரை மாற்றியமைக்க வேண்டுமென்று நோட்டீஸ் வீசி எறியப்பட்டது. அது குறித்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்